

தமிழக முதல்வர், கழக தலைவர், சமூக நீதி காவலர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் நல்லாட்சியை ஏற்று, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில், சங்கராபுரம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் அசோக்குமார் மற்றும் ராவுத்தநல்லூர் கிளைக் கழக செயலாளர் ஜெகதீஷ், வேலு ஆகியோரின் ஏற்பாட்டில், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, சங்கராபுரம் வடக்கு ஒன்றியத்தைச் சேர்ந்த நாம் தமிழர் கட்சி நிர்வாகி குணா தனது ஆதரவாளர்கள் 50க்கும் மேற்பட்டோருடன் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர், புதிதாக கழகத்தில் இணைந்தவர்களுக்கு மாவட்ட கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் கழக வேட்டி அணிவித்து அன்புடன் வரவேற்று வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

### எல்லைப் பாதுகாப்புப் படை

## கூடுதல் டி.ஜி.பி.யாக மகேஷ்குமார் அகர்வால் நியமனம்!

சென்னை, ஜன. 21 -

தமிழ்நாடு காவல்துறையின் ஆயுதப்படை டி.ஜி.பி.யாக பணியாற்றி வந்த மகேஷ்குமார் அகர்வால் மத்திய அரசுப் பணிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழக அரசின் சார்பில் அவ்வப்போது பல்வேறு நிர்வாக காரணங்களுக்காக ஐஏஎஸ் மற்றும் ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர். அதோடு ஐஏஎஸ் மற்றும் ஐபிஎஸ் அதிகாரிகளுக்குப் பதவி உயர்வு மற்றும் கூடுதல் பொறுப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் மத்திய அரசுப் பணிக்கும் பணியிட மாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில் தமிழகக் காவல்துறையின் ஆயுதப் படை டி.ஜி.பி.யாக பணியாற்றி வந்த மகேஷ்குமார் அகர்வால் எல்லைப் பாதுகாப்புப் படை கூடுதல் டிஜிபியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கூடுதல் டி.ஜி.பி.யாக 4 ஆண்டுகள் பதவி வகிப்பார் என்று தகவல் வெளியாகி உள்ளது. போதைப்பொருள் தடுப்பு நுண்ணறிவு ஏடிஜிபியாக பணியாற்றிய இவர். கள்ளக்குறிச்சி விஷ சாராய சம்பவத்தில் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டு ஆயுதப்படை ஏ.டி.ஜி.பி.யானார் என்பது குறிப்பிடத்தக்கது.



வேலாண்டிபாளையம் டாக்டர்.இராதாகிருஷ்ணன் வீதியில் பொதுமக்களுக்கு பொங்கல் பொருட்கள், பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக் கலந்து கொண்டு, 5,000 பொதுமக்களுக்கு ரூபாய் 50 லட்சம் மதிப்பிலான பொங்கல் பொருட்களையும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நலத் திட்ட உதவிகளையும் வழங்கி தொடங்கி வைத்து,வாழ்த்தி சிறப்புரையாற்றினார் மாநகர் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் எம்.சிவராமன் தலைமையில் வேலாண்டிபாளையம் பகுதி திமுக செயலாளர் எ.எம். கிருஷ்ணராஜ் வரவேற்புரையில் மாநகர் மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் எஸ். பூர்ணசந்திரன், துணை அமைப்பாளர்கள் மகாலிங்கம், முத்துப்பாண்டி, தேவசகாயம், பாலகிருஷ்ணன், சக்திவேல் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கழகத்தினர் பங்கேற்றனர்.

### கல்வி நிலையம் –

## நூலகங்களில் கலைஞரின் ‘குறளோவியம்’ இடம் பெற வேண்டும்!

### ‘பாரதி நிலையம்’ புத்தக வெளியீட்டு விழாவில் – தொழில் அதிபர் நல்லி குப்புசாமி வலியுறுத்தல்!

சென்னை, ஜன. 21 -

பாரதி நிலையம் பதிப்பகம், கலைஞர் அவர்களின் ‘குறளோவியம்’ நூலை புதிய பதிப்பாக, பக்கத்துக்கு பக்கம் படத்துடன் தயாரித்து உள்ளது. இதன் வெளியீட்டு விழா சென்னை நந்தனத்தில் நடைபெற்றது. விழாவுக்கு ‘பாரதி நிலையம்’ பதிப்பகத்தின் உரிமையாளர் சித. பழநியப்பன் தலைமை தாங்கினார். குறளோவியத்தின் புதிய பதிப்பை தொழிலதிபர் நல்லி குப்புசாமி செட்டியார் வெளியிட்டார். அதன் முதல் பிரதியை நியூ பிரின்ஸ் குரூப் ஆப் இன்ஸ்டிடியூசன் சேர்மன் கே. லோகநாதன் பெற்றுக் கொண்டார்.

விழாவில் நல்லி குப்புசாமி செட்டியார் பேசியதாவது:-

கலைஞர் அவர்கள், நினைவாற்றலில் இளைஞராக திகழ்ந்தவர் என்று பெருமைப்பட சொல்லலாம். அவர் தன் கடைசி நாள் வரையில் தமிழ் மீது உள்ள அளவற்ற பற்றால் எழுதிக் கொண்டே இருந்தார். சினிமாவில் வசனம் டிவி சீரியல்களில் வசனம் என்றில்லாமல் புத்தகங்களும் எழுதி வந்தார். திருக்குறளுக்கு உரை எழுதினார், குறளோவியம் புத்தகத்தையும் வெளியிட்டார். எத்தனையோ பதிப்புகளை கண்ட குறளோவியம், இப்போது பாரதி நிலையம் மூலம் புதிய பதிப்பு கண்டிருக்கிறது. இந்த பதிப்பகத்தின் உரிமையாளர் சித. பழநியப்பனின் முயற்சியால் வெளிவந்திருக்கிறது. பாராட்டத்தக்க முயற்சி குறளோவியம் புத்தமாக வெளிவருவதற்கு முன்பு முரசொலியில் கட்டுரையாக தொடராக தினமணி கதிரிலும் வெளிவந்தது.

திருவள்ளுவரின் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் இந்த 3 பால்களில் இருந்து தனக்குப் பிடித்த குறட்பாக்களில் 354ஐ தேர்ந்தெடுத்து விளக்கம் எழுதி இருக்கிறார். குறளின் சுவை எப்படி என்பதை அறிந்து கொள்வதற்கு இந்த புத்தகம் பெரிதும் உதவும் திருக்குறளுக்கு; (குறளோவியம்) ஒரு முன்னோட்டமாக இதன் முதல் பிரதியை இன்றைய நாளில் வெளியிடும் பாக்கியம் எனக்கு கிடைத்தது என்பதை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.

கல்வியாளர் லோகநாதன் முதல் பிரதியை பெற்றதில் கூடுதல் மகிழ்ச்சி. எல்லா கல்வி நிலையங்களிலும் நூலகங்களிலும் இந்த குறளோவியத்தின் புதிய பதிப்பு இடம் பெற வேண்டும் என்பது எனது விருப்பம் அது நிறைவேறும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு தொழிலதிபர் நல்லி குப்புசாமி செட்டியார் பேசினார்.

### கோவை மாநகர் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி சார்பில்

## 5 ஆயிரம் பொதுமக்களுக்கு ரூ. 50 லட்சத்தில் பொங்கல் பொருட்கள் - நல உதவிகள்!

### மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் வழங்கினார்!

கோவை, ஜன. 21 -

கழக இளைஞரணிச் செயலாளர் - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா , மாநகர் மாவட்ட தி.மு.க. விவசாய தொழிலாளர் அணி சார்பில், தமிழ்ப் புத்தாண்டு, தமிழர் திருநாள், சமத்துவப் பொங்கல் விழா, வேலாண்டிபாளையம் டாக்டர்.இராதாகிருஷ்ணன் வீதியில் பொதுமக்களுக்கு பொங்கல் பொருட்கள், பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் கோவை மாநகர் மாவட்ட திமுக செயலாளர் நா. கார்த்திக் கலந்து கொண்டு,5,000 பொதுமக்களுக்கு ரூபாய் 50 லட்சம் மதிப்பிலான பொங்கல் பொருட்களையும், பள்ளி மாணவ மாணவிகளுக்கு நலத் திட்ட உதவிகளையும் வழங்கி தொடங்கி வைத்து, வாழ்த்தி சிறப்புரையாற்றினார் .

மாநகர் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி தலைவர் எம்.சிவராமன் தலைமையில் வேலாண்டிபாளையம் பகுதி திமுக செயலாளர் எ.எம்.கிருஷ்ணராஜூ வரவேற்புரையில் மாநகர் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் எஸ்.பூர்ணசந்திரன், துணை அமைப்பாளர்கள் மகாலிங்கம், முத்துப்பாண்டி, தேவசகாயம், பாலகிருஷ்ணன், சக்திவேல் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி. முருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்பிர மணியன், வடக்கு தொகுதி பார்வையாளர் வாசிம் ராஜா முபாரக், பகுதிச் செயலாளர்கள் கே.எம். ரவி, பரணி கே. பாக்ய ராஜ், அணிகளின் அமைப்பாளர்கள் நா.பாபு, சத்யா கோவை தங்கம், தி.கண்ணன், சி.ஆர்.கனிமொழி, வட்டக்கழக செயலாளர்கள் கே.பிரவீன்ராஜ் எம்.சி., ஆர்.சிவகுமார், என். பொன்ராஜ், பகுதிக்கழக நிர்வாகிகள் மைதிலி நடராஜ், சுந்தர்ராஜன், ராஜேந்திரன், லதா மகேஸ்வரி, எல்.நாகராஜ், எஸ்.மகேஸ்வரன், ரமேஷ், கிருஷ்ணன் வட்டக் கழக நிர்வாகிகள் பி.நாகராஜ், ஷியாம் ஜெயபால், டி.வரதராஜ், எஸ். சாவித்ரி, எஸ்.குணசேகரன், ச.லட்சுமணன்,எம். நாகராஜ், கே.கருப்புசாமி, வி.பி.கிருஷ்ணமூர்த்தி, கேசவன், ஆர்.ஆர்.மோகன் குமார் பி.எல்.ஏ. பாகமுகவர்கள்,கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கழக முன்னோடி – முரசொலி முன்னாள் புகைப்பட நிபுணர்

## ‘ஹேப்பி ஸ்டுடியோ’ எம்.இராஜேந்திரன் மறைவு!

### கழக முன்னோடிகள் அஞ்சலி! வேதாரண்யம் – தாணிக்கோட்டகத்தில் இறுதிச் சடங்குகள்!



வேதாரண்யம், ஜன.21 -

‘முரசொலி’யின் முன்னாள் புகைப்பட நிபுணரும், கழக முன்னோடியுமான எம்.ராஜேந்திரன் எனும் ‘ஹேப்பி’ ஸ்டுடியோ இராஜேந்திரன், நேற்று முன்தினம் திடீர் உடல்நலக் குறைவால் தனது சொந்த கிராமமான தாணிக்கோட்டகத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அவருக்கு வயது 70.

தகவல் அறிந்து ஏராளமான கழக முன்னணியினரும், தோழர்களும் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

கழகப் பேரிகையான ‘முரசொலி’யில் 1981 முதல் 94-ஆம் ஆண்டு வரை புகைப்பட நிபுணராகப் பணிபுரிந்தவர் இராஜேந்திரன்.

கழகத்தின் போர்வாளும் கேடயமுமான ‘முரசொலி’யை தம் உயிரினும் மேலாக நேசித்தவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்பதறிவோம்!

கழகம் எதிர்க்கட்சியாக இருந்து, பல்வேறு சோதனைகளுக்குள்ளாகி இருந்த கால கட்டத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் கழகத்தவர்களுக்கு நாள்தோறும் தமது எழுத்துக்களால் உணர்ச்சியும், எழுச்சியும் ஊட்டி வந்த காலத்தில், ‘முரசொலி’யில் புகைப்பட நிபுணராகப் பணிபுரிந்த இராஜேந்திரன், தலைவர் கலைஞர் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், பொதுக்கூட்டங்கள் அனைத்துக்கும் சென்று, அணை திரண்ட வெள்ளமெனத் திரளும் கழகத்தினர் கூட்டத்தை - தொழில் நுட்ப வளர்ச்சி பெருமளவிற்கு இல்லாத அந்தக் காலத்தில், மிகுந்த ஆற்றலோடு புகைப்படங்கள் எடுத்து ‘முரசொலி’யில் பிரசுரித்து, தலைவர் கலைஞர் அவர்களின் பாராட்டைப் பெற்றவராக விளங்கினார். அவரது அன்புக்குப் பாத்திரமாகத் திகழ்ந்தார் எனில் அது மிகையல்ல.

அவரது இந்த கொள்கை உணர்ச்சிக்கு வழிகோலியவர், அவரது மூத்த சகோதரரான ‘முரசொலி’ சிங்காரம் எனும் தொழிலதிபர் எம்.சிங்காரவேலு என்றால் அதனை எவரும் மறுத்திடார்!

முரசொலி சிங்காரம், மறைந்த தமது சகோதரர் இராஜேந்திரனுக்கு முன்பு 1972 முதல் 1983 வரை, ‘முரசொலி’யில் புகைப்பட நிபுணராகப் பணிபுரிந்தவராவார்.

இச்சகோதரர்களை ‘முரசொலி’ சிங்காரம், ‘முரசொலி’ இராஜேந்திரன் எனும் அடைமொழியோடு கழகத்தினர் அழைத்து மகிழுவார்கள்.

மேலும் - அவர்கள் தியாகராயர் நகர்-மேட்லி சாலையில், நடத்தி வந்த ‘ஹேப்பி ஸ்டுடியோ’, கழகத்தவர் கூடிடும், ஒரு பாடி வீடு போல இருந்தது என்றால், கழக முன்னோடிகள் எவரும் அதனை மறுத்திட மாட்டார்.

இங்ஙனம் கழகப் பின்னணி கொண்ட ராஜேந்திரன் மற்றும் சிங்காரவேலு ஆகியோருக்கு சொந்த ஊர், நாகை மாவட்டம் - வேதாரண்யம் வட்டத்தைச் சேர்ந்த தாணிக்கோட்டகமாகும்.

இவர்களின் பெற்றோர், மாணிக்கம் தேவர் - நாகலட்சுமி அம்மாள் ஆகியோர் ஆவர்! மறைந்த ராஜேந்திரனுக்கு ஜோதி எனும் மனைவி உள்ளார். இவ்விணையினருக்கு ராஜவழுதி, அன்பரசன் எனும் மகன்கள் உள்ளார்கள்.

இராஜேந்திரனுடன் பிறந்த மூத்த சகோதரி ஸ்ரீவள்ளி மறைவெய்தி விட்டார்! எம். சுப்பிரமணியன் (துணை ஆட்சியராகவும், மறைந்த அமைச்சர் - கழக மூத்த முன்னோடி கோ.சி.மணி அவர்களிடம் 10 ஆண்டு காலம் முதுநிலை நேர்முக உதவியாளராகவும் பணிபுரிந்தவர்), ‘முரசொலி’ சிங்காரம் எனும் தொழிலதிபர் சிங்காரவேலு எனும் மூத்த சகோதரர்கள் உள்ளனர். பத்மாவதி எனும் மற்றுமோர் மூத்த சகோதரி மறைவெய்திவிட்டார்.

ரவிச்சந்திரன் எனும் இளைய சகோதரர் மறைவெய்தி விட்டார்.

தாணிக்கோட்டகத்தில் தாம் கட்டிவரும் வீட்டிற்கு, அண்மையில் ‘புது மனை புகுவிழா’ நடைபெறவுள்ள நிலையில், அப்பணிகளைப் பார்வையிடவும், அவ்விழா அழைப்பிதழை கழகத்தினர் மற்றும் உறவினர்களுக்கு வழங்கிடவும் சென்றிருந்த இராஜேந்திரனுக்கு, நேற்று மாலை 5.30 மணியளவில் திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது.

இந்நிலையறிந்து, திருத்துறைப்பூண்டியில் உள்ள மருத்துவமனைக்கு அவரை உறவினர்கள் அழைத்துச் சென்றனர். ஆனால், அவரது உயிரைக் காக்கும் இம்முயற்சியில் பலனேதும் விளையாமல் இராஜேந்திரன் அவர்கள், வழியிலேயே மறை வெய்தினார்.

இத்தகவலறிந்து அதிர்ச்சியுற்று அவரது குடு ம்பத்தினர், சென்னை - கலைஞர் நகர் பாரதிதாசன் காலனி பகுதியிலிருந்து விரைந்து சென்றார்கள்.

இம்மறைவுச் செய்தியறிந்து வருந்திய நாகை மாவட்டக் கழக முன்னோடிகள், தோழர்கள் பலரும் அவரது திருவுடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த இராஜேந்திரன் அவர்களின் இறுதி ஊர்வலம், வேதாரண்யம் - தாணிக்கோட்டகத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்திலிருந்து நேற்று (20.1.2025-திங்கள்கிழமை) மாலை 4.00 மணியளவில் புறப்பட்டுப் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.



திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோட்டூர் வடக்கு ஒன்றிய வாக்குசாவடி முகவர்கள் கூட்டத்தில் தொகுதிபார்வையாளர் என்.வி.காமராஜ் உரையாற்றினார். ஒன்றியச் செயலாளர் பால. ஞானவேல், துணை செயலாளர்கள் சிவக்குமார், கஸ்தூரி, மதியழகன், மாவட்டப் பிரதிநிதிகள் நித்யானந்தம், யுவராஜா, பழனிவேல், நாகை மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் எம்.எஸ். அன்புவேலன் மற்றும் வாக்கு சாவடி முகவர்கள் கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.



பெருந்துறை ஊத்துக்குளி வடக்கு ஒன்றியத்துக்குட்பட்ட குன்னத்தூர் பேரூராட்சி வார்டு எண்–15 பகுதியில் சமத்துவப் பொங்கல், நலத்திட்ட உதவி வழங்கும் விழா மற்றும் மாற்றுக் கட்சியினர் இணையும் விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில் குன்னத்தூர் பேரூராட்சி பகுதியைச் சேர்ந்த மாற்றுக் கட்சியினர் சுமார் 100 பேர் முன்னாள் அமைச்சர் தோப்பு வெங்கடாசலம் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்ற கழகத்தில் இணைத்துக் கொண்டனர். மேலும் இந்நிகழ்ச்சியில், ஊத்துக்குளி வடக்கு ஒன்றியச் செயலாளர் சுப்பிரமணியம், நகர செயலாளர் சென்னியப்பன், பேரூராட்சி கவுன்சிலர்கள், வார்டு செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### நாளை சிவகங்கை வருகை தரும்

## முதல்வரை வரவேற்க 25 ஆயிரம் கழகத்தினர் பங்கேற்பு!

### துரை.ஆனந்த் – எம்.ஜெயராமன் தகவல்!

சிவகங்கை, ஜன. 21 -

சிவகங்கைநகர் மற்றும் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் கூட்டம் கலைஞர் அறிவாலயத்தில் நகர்கழகச் செயலாளர் சி.எம். துரை ஆனந்த் தலைமையில் நடைபெற்றது .

இந்த கூட்டத்தில் நாளை (22 ஆம் தேதி) தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் சிவகங்கை அரசு மன்னர் கல்லூரி மைதானத்தில் 50ஆயிரம் நலத்திட்ட உதவிகளை வழங்கியும் முடிவற்ற திட்டங்களை துவங்கி வைத்தும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி விழா பேருரையாற்றுகிறார் .

இதற்காக சிவகங்கை நகரில் உள்ள 27 வார்டுகளிலும் 25, ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழகத் தொண்டர்கள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்களை திரட்டி முதல்வரை சிறப்பான முறையில் வரவேற்பு அளிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்த முதல்வர்அவர்கள் முதல்வராகிய பின்பு முதல் முறையாக சிவகங்கை நகருக்கு வருகை தருகிறார்.முதல்வர் அவர்களை சிறப்பான முறையில் வரவேற்பு தருவது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த கூட்டத்தில் கூட்டத்தில் நகர்மன்ற துணைத் தலைவர் எம்.கார்கண்ணன், கழக நிர்வாகிகள் ஜெயகாந்தன் ,வீனஸ் ராமநாதன், அயூப் கான், வீரகாளை மகளிர் அணி மஞ்சுளா, ராஜேஸ்வரி, விஜயகுமார், சரவணன், முருகேசன், சேகர், இலக்கிய அணி ராஜபாண்டி, மாணவரணி ராஜ் அமுதன் உட்பட வார்டு நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

சிவகங்கை தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் எம். ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது. வருகிற 22ஆம் தேதி தமிழக முதல்வர் அவர்கள் நம்முடைய மாவட்டத்திற்கு சிவகங்கை நகருக்கு முதல்வரான பிறகு முதல் முறையாக வருகை தருகிறார்கள் மூன்று ஆண்டுகளில் சிவகங்கை மாவட்டத்திற்கும் நகருக்கும் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள் முதல்வராகிய முதல் முறையாக சிவகங்கை வருகை தரும் முதல்வரை வரவேற்பதற்காக தெற்கு ஒன்றிய கழகத்திலிருந்து அழைத்து வருவது என்றும் சிறப்பான முறையில் வரவேற்பு தருவது என்று கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப் பட்டது .

தெற்கு ஒன்றியத்தில் இருந்து 25ஆயிரத்திற்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் , பொதுமக்கள் பங்கேற்க செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் நிர்வாகிகள் மனோகரன் பொன்னம்பலம், அழகு சுந்தரம், மகளிர் அணி மஞ்சுளா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து பஞ்சவர்ணம், ராசாங்கம் உட்பட ஊராட்சி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு.ப. அழகியநம்பி
### சனவரி 21 (2022)



கழகம் துவக்க காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, சட்டக் கல்லூரியில் மாணவராக பயிலும் போதே ‘மாணவர் தி.மு.க.’வில் உறுப்பினராகி பணியாற்ற தொடங்கியவர்.

1971ஆம் ஆண்டு, தூத்துக்குடி உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.

நெல்லை மாவட்ட கூட்டுறவு வங்கி தலைவராகவும் – மாநில தமிழ்ச் சங்க தலைவராகவும் பதவி வகித்தவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு பதினான்கு மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.